Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், செப்டம்பர் 08, 2026 | இதழ் 148

# மாநில திட்டக்குழுவுக்கு மாற்றாக துறைவாரியான குழுக்களை அமைக்க தவெக அரசு திட்டம்!




சென்னை, 08 செப்டம்பர் 2026: தமிழ்நாட்டில் 55 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட மாநில திட்டக்குழு மாற்றாக துறைவாரியான குழுக்களை அமைக்க தவெக அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தவெக அரசு பொறுப்பேற்றதும் துணைத் தலைவர் உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் ராஜினாமா செய்த நிலையில் தற்போது வரை புதிய துணைத் தலைவர் நியமிக்கப்படவில்லை. பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்யுங்கள்

திட்டக்குழுவை பொறுத்தவரை முதலைச்சர் தலைவராக இருப்பர், அதன் கீழே துணை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இருப்பார்கள். இந்நிலையில் தற்போதுவரை இந்த திட்டக்குழுவிற்கு இதுவரை யாரும் நியமிக்கப்படவில்லை. தற்போது இந்த அமைப்பில் ஒரே ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி மட்டுமே உறுப்பினர் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். மற்ற முக்கியப் பணியிடங்கள் எதுவும் நிரப்பப்படாமல் காலியாகவே வைக்கப்பட்டுள்ளன. இதனால் அரை நூற்றாண்டுக்கும் மேலாகச் செயல்பட்டு வந்த இந்த அமைப்பு முடிவுக்கு வர உள்ளதாகத் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக அரசின் ஒரு முக்கிய அங்கமாக இருக்கும் இந்த நிறுவனத்தை கலைக்க தமிழக வெற்றி கழக அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் பல்வேறு கொள்கை சார்ந்த முடிவுகளை ஆய்வு செய்தும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை ஆய்வு செய்தும் தமிழகத்திற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் தொடர்பான பல்வேறு கொள்ளைகள் மற்றும் அறிக்கைகளை அளிக்க 1971 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் தமிழ்நாடு திட்டக்குழு என்பதை உருவாக்கியிருந்தார்.

அதன்படி திட்டக் குழுவானது செயல்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து பல்வேறு கொள்கை சார்ந்த அறிக்கைகளை அளித்து வந்தது. இந்நிலையில் மாநில திட்டக்குழு என்ற அமைப்பையே ஒட்டுமொத்தமாகக் கலைத்து விட அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் கொள்கைகளுக்கு ஆலோசனை வழங்குவது மட்டுமே இந்த திட்டக்குழுவின் வேலையாக இருந்து வந்தது. ஆனால், ஆண்டு முழுவதும் ஒரே அமைப்பை வைத்துப் பராமரிப்பதற்குப் பதிலாக, தேவைப்படும் குறிப்பிட்ட துறைகளுக்குத் தனித்தனியாக நிபுணர் குழுக்களை அமைப்பதே அரசுக்கு அதிகப் பலன் தரும் என்று அரசு கருதுகிறதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு குற்றத்தின் பின்னணியிலும் ஒரு காரணம் இருக்கலாம்; அதற்காக சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது என்று சொல்ல முடியாது - முதல்வர்




சென்னை 08, செப்டம்பர் 2026: காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு முதல்வர் விஜய் பதிலுரை வழங்கினார். அப்போது பேசிய அவர். சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தால் தான் மாநிலத்திற்கான தொழில் முதலீடுகள் வரும். சட்டத்தை மதித்தால் காவல்துறை உற்ற நண்பனாக இருக்கும். ஆனால் சட்டத்தை மீறுபவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் எதிரியாக காவல்துறை இருக்கும். காவல்துறை என்பது மக்களின் ரூம்பிக்கைகளுக்கு அடித்தளமாக விளங்கும் அமைப்பாகும்.

காவல்துறையின் சட்ட நடவடிக்கையில் தேவையற்ற தலையீடு இருக்க கூடாது.

ஒவ்வொரு குற்றத்தின் பின்னணியில் ஒரு குடும்பப்பிரச்சனை இருக்கலாம், முன்விரோதமாக இருக்கலாம், பழிவாங்கும் எண்ணம் இருக்கலாம் என்றும் யாருக்கும் தெரியாத புதிய விளக்கத்தை அளித்துள்ளார் முதல்வர் விஜய். சமூக காரணிகளும் குற்றங்கள் நடப்பதற்கு காரணமாக இருக்கலாம். ஒரு குற்றம் நடந்துவிட்டது என்பதற்காக சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது என்று கூற முடியாது என்றும் கூறினார். போதைப் பொருள் கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டு அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. காவல்துறையின் சட்ட நடவடிக்கையில் தேவையற்ற தலையீடு இருக்க கூடாது.

போதைப்பொருளை ஒழிப்பது என்பது 100 நாட்களில் முடியாது. வலுவான சைபர் பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். போதை பொருள் தடுப்பு தொடர்பாக தவெக ஆட்சியில் 3,200 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 1.16 லட்சம் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு உரிய தண்டனை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குற்றங்கள் தெருவில் மட்டும் இல்லாமல் இணையதளத்திலும் நடைபெறுகிறது. குற்றவாளிகளுக்கு சட்டத்தின் மீது அச்சம் இருக்க வேண்டும். காவல் மரணங்கள் சாதாரண நிகழ்வு அல்ல, காவல் மரணங்கள் தொடர்பாக வெளிப்படையான விசாரணை நடத்தப்படும். காவல் மரணங்கள் மக்கள் நம்பிக்கையை பாதிக்கும் செயல் ஆகும்.

அதே போல மக்களை காக்கும் காவலர்களை காப்பது அரசின் கடமை. காவல் துறையில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றார்.

# பிரதமர் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் செப்டம்பர் 8 பயணம் மேற்கொள்கிறார்

சென்னை, 08 செப்டம்பர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் 2026 செப்டம்பர் 8 அன்று பயணம் மேற்கொள்கிறார். வதோதராவில் நண்பகல் 12 மணியளவில் ரூ.35,000 கோடிக்கும் அதிக மதிப்புடைய பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்து முடிவுற்றப் பணிகளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். இந்நிகழ்ச்சியில், அவர் உரையாற்றவும் உள்ளார்.

தொடர்ந்து, மாலை 5.45 மணி அளவில் மும்பையில் உலகளாவிய ஃபின்டெக் திருவிழா 2026-ஐ தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

வதோதராவில் பிரதமர்

மேற்கு சிறப்பு சரக்கு போக்குவரத்து வழித்தடத்தின் மூன்று முக்கியப் பகுதிகளைப் பிரதமர் அர்ப்பணிக்கிறார். இவை, ரூ.20,700 கோடிக்கும் அதிகமான செலவில் வடிவமைக்கப்பட்ட 326 கிலோ மீட்டர் வழித்தட தூரத்தை உள்ளடக்கியதாகும். இதில், சனந்த் (வடக்கு) - மக்கர்புரா, நியூ அம்பர்கான்- நியூ சஃபாலே, சஃபேல் - ஜேஎன்பிடி ஆகியப் பகுதிகள் அடங்கும்.

இத்திட்டம் ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையத்துடனான நேரடிப் போக்குவரத்து, ஏற்றுமதி - இறக்குமதி சரக்குகளின் விரைவான போக்குவரத்தை எளிமைப்படுத்தும், தொழில்மையங்கள் - துறைமுகங்களுக்கிடையேயான போக்குவரத்தை வலுப்படுத்தும், சரக்கு போக்குவரத்து செலவுகளைக் குறைக்கும், மும்பை ரயில்வே கட்டமைப்பில் நெரிசலைக் குறைக்க உதவும்.

நியூ சனந்த் (வடக்கு), நியூ மக்கர்புரா, நியூ அம்பர்கான், நியூ ஜேஎன்பிடி (மும்பை) ஆகிய பகுதிகளிலிருந்து சரக்குப் போக்குவரத்து ரயில் சேவைகளையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். அத்துடன், வதோதரா - தண்டா சாலை இடையே ஒரு புதிய ரயில் சேவையையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளார், இது வதோதரா, சோட்டா உதய்பூர், அலிராஜ்பூர் மாவட்ட மக்களுக்குப் பயனளிக்கும்.

சோட்டா உதய்பூர் - தார் திட்டத்தின் ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்ட ஜோபத் - தண்டா சாலை இடையேயான புதிய ரயில் வழித்தடத்தை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

329 கிலோ மீட்டர் வழித்தடங்களை உள்ளடக்கிய ரூ.9,700 கோடிக்கு அதிகமான செலவில் அமைக்கப்படவுள்ள மூன்று ரயில்வே திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

குஜராத் அரசின் சுமார் ரூ.2,600 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைக்கவுள்ளார்.

மும்பையில் பிரதமர்

உலகின் மிகப் பெரிய, வருடாந்திர நிதி தொழில்நுட்ப மாநாடுகளில் ஒன்றான உலகளாவிய ஃபின்டெக் திருவிழா 2026-ஐ பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

உலகளாவிய ஃபின்டெக் திருவிழாவின் 7-வது பதிப்பு 2026 செப்டம்பர் 8 முதல் 11 வரை மும்பையில் நடைபெறுகிறது. 2020-ம் ஆண்டு முதல் உலகளாவிய ஃபின்டெக் திருவிழா ஒரு சர்வதேச சிந்தனைத் தளமாக உருவாகியுள்ளது. இதில், கொள்கை வகுப்பாளர்கள், ஒழுங்கு முறையாளர்கள், மத்திய வங்கிகள், நிதி அமைப்புகள், ஃபின்டெக், தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள், இதர உலகளாவிய சம்பந்தப்பட்ட துறையினரை ஒருங்கிணைத்து எதிர்கால நிதிச்சூழலை வடிவமைப்பது குறித்து விவாதிக்கப்படுகிறது.

# குவாஹத்தி பல்கலைக்கழகத்தில், ரூ. 110 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்புத் திட்டப் பணிகளுக்கு குடியரசு துணைத் தலைவர் அடிக்கல் நாட்டினார்

சென்னை 08, செப்டம்பர் 2026: குவாஹத்தி பல்கலைக் கழகத்தில் ரூ.110 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டினார். இத்திட்டங்களில், புதிய பல்துறை கல்வி சார் கட்டடம், மாணவர்களுக்கான புதிய விடுதி, கலையரங்கம், நூலகம் தொடர்பான பணிகள் ஆகியவை இதில் அடங்கும்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு சி பி ராதாகிருஷ்ணன், பாரத ரத்னா கோபிநாத் போர்டோலோய் உள்ளிட்ட முக்கியத் தலைவர்களின் மக்கள் இயக்கத்தைத் தொடர்ந்து, வடகிழக்கு இந்தியாவின் முதல் பல்கலைக்கழகமாக, 1948-ம் ஆண்டு ஜனவரி 26-அன்று நிறுவப்பட்ட குவாஹத்தி பல்கலைக் கழகத்தின் வரலாற்றுச் சிறப்பை விரிவாக எடுத்துரைத்தார். தேசிய மதிப்பீடு அங்கீகார மன்றத்தின் 'ஏ+' அங்கீகாரம், தேசிய தரவரிசை மதிப்பீடு நிறுவனத்தின் தரவரிசையில் மாநில பொதுப் பல்கலைக்கழகங்களுக்கிடையே 9-வது இடத்தைப் பெற்று, இப்பகுதியின் முன்னணிக் கல்வி நிறுவனமாக, இப்பல்கலைக்கழகம் உருவெடுத்துள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவின் மொழி சார் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்த அவர், ஒரு நாகரிகத்தின் நினைவுகள், ஞானம், அடையாளத்தை, மொழி சுமந்து நிற்பதாக அவர் குறிப்பிட்டார். அஸ்ஸாமி, தமிழ் மொழியில் உள்ள இலக்கியப் படைப்புகள் பரஸ்பரம் மொழி பெயர்க்கப்படுவதற்கு வரவேற்புத் தெரிவித்த அவர், இவ்விரண்டு மாநிலங்களுக்கு இடையே, கல்வி, இலக்கியம் சார்ந்த பரிமாற்றங்களை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், இந்தியாவின் கலாச்சார ஒற்றுமை, அதன் மொழிசார்ந்த பன்முகத்தன்மையை மேலும் வளப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

பிரம்மபுத்திரா படுகை, அழியும் நிலையில் உள்ள மொழிகள், பன்மொழித்தன்மை, மகளிரியல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, இந்திய அறிவுசார் அமைப்புகள் ஆகியவை குறித்து இப்பல்கலைக் கழகம் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளை அவர் பாராட்டினார். பிரம்மபுத்திரா நதியை ஒரு சூழலியல், பொருளாதார, நாகரிக சக்தியாக விவரித்த அவர், பிராந்திய, தேசிய சவால்களை எதிர்கொள்ளும் வகையிலான ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தை திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

## சென்னை ஓப்பன் 2026: சிபிசிஎல் ஆதரவுடன் செப்டம்பர் 8 அன்று டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் கோர்ஸ்-ல் தொடக்கம்

சென்னை 08, செப்டம்பர் 2026: டிபி வேர்ல்ட் ப்ரொஃபெஷனல் கோல்ஃப் டூர் ஆஃப் இந்தியா (டிபி வேர்ல்ட் பிஜிடிஐ), சென்னை ஓப்பன் 2026 பவர்ட் பை சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) டோர்னமென்ட்டை சென்னையில் உள்ள டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் கோர்ஸ்-ல் செப்டம்பர் 8 முதல் 11, 2026 வரை நடத்துகிறது. இந்த டோர்னமென்ட்டின் மொத்த பரிசுத்தொகை ஐஎன்ஆர் 1 கோடி.

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) இந்த டோர்னமென்ட்டின் பவர்டு பை பார்ட்னர் ஆகவும், டிஎன்ஜிஎஃப் காஸ்மோ கோல்ஃப் கோர்ஸ் போட்டி நடைபெறும் ஹோஸ்ட் வென்யூ ஆகவும் உள்ளது. சென்னை ஓப்பன் டோர்னமென்ட் தற்போது ஐந்தாவது முறையாக நடைபெறுகிறது.

இந்த டோர்னமென்ட்டில் இந்தியாவின் முன்னணி புரொஃபஷனல் வீரர்களில் சிலர் பங்கேற்க உள்ளனர். அவர்களில் சப்தக் தல்வார், நடப்பு சாம்பியனான இலங்கையைச் சேர்ந்த என் தங்கராஜா, வீர் அஹ்லாவத், ஓம் பிரகாஷ் சௌஹான், மனு கந்தாஸ், காலின் ஜோஷி, ரஷீத் கான், ஹனி பைசோயா மற்றும் அக்ஷய் சர்மா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கை




யைச் சேர்ந்த என் தங்கராஜாவைத் தவிர, இந்த டோர்னமென்ட்டில் பங்கேற்கும் முக்கிய வெளிநாட்டு வீரர்களில் இலங்கையைச் சேர்ந்த மிதுன் பெரேரா, வங்கதேசத்தைச் சேர்ந்த ஜமால் ஹொசைன் மற்றும் பாதல் ஹொசைன், தாய்லாந்தைச் சேர்ந்த தனபட் பிச்சைகூல், ஜப்பானைச் சேர்ந்த கொய்ச்சிரோ இஷிகா மற்றும் தைகா தனகா, செக் குடியரசைச் சேர்ந்த ஸ்டெபான் டானெக், உகாண்டாவைச் சேர்ந்த ஜோஷுவா சீல், நேபாளத்தைச் சேர்ந்த சுபாஷ் தமாங், அமெரிக்காவைச் சேர்ந்த கொய்ச்சிரோ சாடோ மற்றும் டொமினிக் பிச்சிரில்லோ, அயர்லாந்தைச் சேர்ந்த டெக்லன் கென்னி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். உள்ளூர் சவாலுக்கு சென்னையைச் சேர்ந்த புரொஃபஷனல் வீரர்கள் எஸ். பிரசாந்த், எஸ். ஜான் ராயன், இளையராஜா சி. மற்றும் சி. அருள். முன்னிலை வகிக்க உள்ளனர்.

## இஸ்ரேல் மீது மீண்டும் பல்முனை தாக்குதலுக்கு ஈரான் திட்டமிட்டதாக தகவல்!

சென்னை 08, செப்டம்பர் 2026: கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலைப் போன்ற மிகப்பெரிய ஒருங்கிணைந்த பல்முனை தாக்குதலை இஸ்ரேல் மீது நடத்த ஈரான் திட்டமிட்டு வந்ததாக தகவல்கள் வெளியாகியிருக்கிறது.



இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையேயான சமீபத்திய போருக்கு தொடக்கமாக அமைந்தது 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலாகும். அன்று ஹமாஸ் தலைமையிலான ஆயுதக் குழுக்கள் காசா எல்லையில் இருந்து இஸ்ரேல் மீது ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தின. அதே நேரத்தில், ஹமாஸ் போராளிகள் காசா-இஸ்ரேல் எல்லையில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்புத் தடைகளை உடைத்து, பல்வேறு இடங்கள் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

அவர்கள் எல்லைக்கு அருகிலிருந்த கிராமங்களில் உள்ள குடியிருப்புகள் மற்றும் ராணுவ நிலைகளை கடுமையாகத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் 1,200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், சுமார் 250 பேர் பணயக் கைதிகளாக காசாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இச்சூழலில், மத்திய கிழக்கில் தொடர்ந்து நிலவி வந்த போர் பதற்றத்திற்கு மத்தியில், இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலைப் போன்ற மிகப்பெரிய பல்முனை தாக்குதலை நடத்த ஈரான் திட்டமிட்டு வந்ததாக இஸ்ரேலின் ஜெருசலேம் போஸ்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், இந்தத் தாக்குதலுக்காக லெபனானில் செயல்பட்டு வந்த ஹிஸ்புல்லா, ஏமனில் செயல்பட்டு வந்த ஹவுத்திகள், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் மற்றும் ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் செயல்பட்டு வந்த தங்களது ஆதரவு ஆயுதக் குழுக்களை ஈரான் ஒருங்கிணைத்து வந்ததாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே நேரத்தில், இம்முறை ஒரே கட்டமாக தாக்குதல் நடத்தாமல், ஒரே நேரத்தில் பல்வேறு திசைகளில் இருந்து இஸ்ரேலைத் தாக்குவதே திட்டமாக இருந்ததாகவும் கூறப்பட்டது. இது தொடர்பாக, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை, தனது ஆதரவு அமைப்புகளுடன் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியதுடன், தாக்குதலுக்கான கூட்டு ராணுவப் பயிற்சிகளையும் மேற்கொண்டு வந்ததாக ஜெருசலேம் போஸ்ட் தெரிவித்திருந்தது.

இதற்காக ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களின் உற்பத்தியையும் ஈரான் அதிகரித்து வந்ததாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இஸ்ரேல் மீதான அக்டோபர் 7ஆம் தேதி தாக்குதலைப் போன்ற தொரு மிகப்பெரிய ஒருங்கிணைந்த தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால், மத்திய கிழக்கில் தொடர்ந்து நடைபெற்று வந்த போரில் அது மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கும் என அச்சம் நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2027ல் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள உ.பி உட்பட 5 மாநிலங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தேதிகள் மாற்றம்: ஒன்றிய அரசு திடீர் அறிவிப்பு

சென்னை, 08 செப்டம்பர் 2026: உத்தரபிரதேசம் உள்ளிட்ட ஐந்து மாநில சட்டசபை தேர்தலை அடுத்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பின்படி, தேர்தல் நடைபெற உள்ள உத்தரபிரதேசம், பஞ்சாப், கோவா மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் 2027ம் ஆண்டிற்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிகள் முன்கூட்டியே நடத்தப்பட உள்ளன.

அதேபோல் மணிப்பூரில் முதல் கட்ட கணக்கெடுப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் தொடங்கும் இந்த கணக்கெடுப்பு பணிகளை, வரும் டிசம்பர் 1ம் தேதி முதல் 2027ம் ஆண்டு ஜனவரி 4ம் தேதிக்குள் முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. தேர்தல் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆகிய இரண்டு பணிகளிலுமே அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவதால், நிர்வாக ரீதியான பிரச்னைகளை தவிர்க்கும் நோக்கில் இந்த கால அட்டவணை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஐந்து மாநிலங்களில், மணிப்பூர் சட்டசபையின் பதவிக்காலம் 2027ம் ஆண்டு மார்ச் 13ம் தேதியுடன் முடிவடைகிறது. தொடர்ந்து கோவா சட்டசபையின் பதவிக்காலம் மார்ச் 14ம் தேதியும், பஞ்சாப் மார்ச் 16ம் தேதியும், உத்தரகாண்ட் மார்ச் 28ம் தேதியும் நிறைவடைகின்றன. அதே சமயம் உத்தரபிரதேச சட்டசபையின் பதவிக்காலம் மே 22ம் தேதி வரை உள்ளபோதிலும், அங்கு முன்கூட்டியே தேர்தல் நடத்தப்பட உள்ளது.




சட்டசபையின் ஆயுட்காலம் முடிவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளதால், வழக்கமான நடைமுறைப்படி மார்ச் 13ம் தேதிக்கு முன்பாகவே அனைத்து மாநில தேர்தல்களையும் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவை நடத்த முடிவு செய்தால், பிப்ரவரி மாதத்திலோ அல்லது மார்ச் முதல் வாரத்திலோ தேர்தல் தொடங்கலாம். இந்த ஐந்து மாநில சட்டசபை தேர்தலுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு 2027ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த கணக்கீட்டின் முடிவில், உத்தரபிரதேசத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை 13.2 சதவீதம் குறைந்து 13.4 கோடியாக பதிவாகியுள்ளது. அதேபோல் கோவாவில் வாக்காளர் எண்ணிக்கை 10.2 சதவீதம் சரிந்து 10.6 லட்சமாகவும், மணிப்பூரில் 7.6 சதவீதம் குறைந்து 19.3 லட்சமாகவும் உள்ளது. பஞ்சாப் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த சில மாதங்களில் வெளியிடப்பட உள்ள நிலையில், ஐந்து மாநில தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

## பாதுகாப்புப் படைகளுக்காக ரூ.1.10 லட்சம் கோடி மதிப்பிலான கொள்முதல் திட்டங்களுக்கு பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் ஒப்புதல்

சென்னை 08, செப்டம்பர் 2026: பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற பாதுகாப்புக் கொள்முதல் கவுன்சில் கூட்டத்தில், முப்படைகளுக்காக சுமார் ரூ.1,10,000 கோடி மதிப்பிலான பல்வேறு தளவாடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கான கொள்கை அளவிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த மொத்தக் கொள்முதலில் சுமார் 98 சதவீத தளவாடங்கள் உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களிடமிருந்தே கொள்முதல் செய்யப்பட உள்ளது.

இந்திய ராணுவத்திற்காக ரசாயன, உயிரியல், கதிர்வீச்சு, அணு ஆயுதப் பாதிப்புகளைக் கண்டறியும் உளவு வாகனங்கள், கடினமான நிலப்பரப்புகளில் இயங்கும் அதிநவீன வாகனங்கள், கண்ணிவெடி பதிக்கும் அமைப்புகள், மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டர்கள், இழுவை பீரங்கிகள் ஆகியவற்றை வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உளவு வாகனங்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து கண்காணிக்கும் திறன் கொண்டவை. நவீன வாகனங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் கடினமான சூழ்நிலைகளில் ராணுவப் பணிகளை விரைவாக மேற்கொள்ளவும், போக்குவரத்து உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும் பயன்படும்.

இந்திய கடற்படைக்காக ஆருத்ரா ரேடார்கள், கடல்சார் எரிவாயு டர்பைன்களை உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரித்துக் கொள்முதல் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆருத்ரா




ரேடார்கள் தற்போதைய கண்காணிப்பு ரேடார்களுக்கு மாற்றாக செயல்படும். உள்நாட்டு எரிவாயு டர்பைன் உற்பத்தி, போர் கப்பல் துறையில் அயல்நாட்டு சார்பு நிலையைக் கணிசமாகக் குறைக்கும்.

இந்திய விமானப் படையின் போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள், ஹெலிகாப்டர்களின் போர் திறனை மேம்படுத்தும் திட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தரைவழி பல்நோக்கு ஜாமர்கள், பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பான அணுகல் அட்டை (Access Card) அமைப்பைப் பொறுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஜாமர்கள் எதிரிகளின் ரேடார்களை முடக்கும் வல்லமை கொண்டவை. பாதுகாப்பான அணுகல் அட்டை அமைப்பு வழக்கமான காகித அடையாள அட்டைகளுக்குப் பதிலாக அதிநவீன ஸ்மார்ட் கார்டுகளாக மாற்றப்பட்டு பாதுகாப்பு நடைமுறைகளை மேலும் பலப்படுத்தும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# தமிழ்நாட்டில் அக்.6ம் தேதி மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிப்பு!

சென்னை 08, செப்டம்பர் 2026: காலியாக உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு வரும் அக்டோபர் 6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த இரு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடத்த உயர் நீதிமன்றம் தடை ஏதும் விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் விஜய்யின் தவெக கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி அமைத்தது. தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து அதிமுகவில் இருந்து சில எம்எல்ஏக்கள் தவெகவில் இணைந்தனர். இதனால் சில தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப் பட்டது.

இந்நிலையில் காலியாக உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளுக்கு வரும் அக்டோபர் 6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. திருச்சி கிழக்கு, பெருந்துறை, கரூர், விராலிமலை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த தடை அமலில் இருப்பதால் இடைத்தேர்தல் அறிவிக்கப்படவில்லை.

09.09.2026 அன்று வேட்புமனு தாக்கல் தொடங்கும். வரும் 16ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். 17ம் தேதி வேட்புமனு பரிசீலனை செய்யப்படும்.

19ம் தேதி வேட்புமனு வாபஸ் பெற கடைசி நாளாக அறிவிக்கப்பட் டுள்ளது. இரு தொகுதி களுக்கான இடைத்தேர்தலில் வாக்கு எண்ணிக்கை 09.10.2026 ஆண்டு நடைபெற உள்ளது.

# ‘என்ன விலை’ திரைப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா!

சென்னை 08, செப்டம்பர் 2026: தேசிய விருது பெற்ற திரைப்பட இயக்குநர் சஜீவ் பழூர் எழுதி இயக்கியுள்ள ‘என்ன விலை’ திரைப்படத்தை ஜித்தேஷ் விஸ்வம்பரன் மற்றும் அனுகோபால் வேணுகோபாலன் ஆகியோர் கலாமயா சினிவெர்ஸ் நிறுவனத்தின் சார்பில் தயாரித்துள்ளனர். இப்படத்தில் கருணாஸ், நிமிஷா சஜயன் உள்ளிட்டப் பலர் நடித்துள்ள இந்த திரைப்படம் செப்டம்பர் 17 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இதன் டிரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

தயாரிப்பாளர் ஜித்தேஷ் விஸ்வாம்பரன், "பல சிறிய விஷயங்களுக்கு இந்த படம் முன்னுதாரணமாக இருக்கும். படக் குழுவினரோடு ராமேஸ்வரம் மக்களும் கடுமையான உழைப்பு இந்த படத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பலனை நீங்கள் தருவீர்கள் என்று நம்புகிறேன்".

நடிகர் கான்ஸ்டபிள் சுந்தரம், "ஜூனியர் ஆர்ட்டிஸ்டாக இருந்த எனக்கு இந்த படத்தில் வாய்ப்பளித்த இயக்குநருக்கு நன்றி. நடிகர் கருணாஸ் பெரிய நடிகர் என்ற அலட்டல் இல்லாமல் எங்களிடம் இயல்பாக பழகினார். படம் நன்றாக வந்திருக்கிறது".

நடிகர் பிரதீப், "இது ஒரு அருமையான படம். இதில் வாய்ப்பு கொடுத்த இயக்குநர், தயாரிப்பாளர், அண்ணன் கருணாஸுக்கு நன்றி. படம் வெற்றி பெற வேண்டி கொள்கிறேன்".

நடிகர் தர்ஷன், "இந்தப் படத்தில் எனக்கு ரைட்டர் கேரக்டர். அனுப்பி வைத்த எல்லா விருது விழாக்களிலும் இந்தப் படம் விருது வென்றது. மிகச்சிறந்த வெற்றி படமாக இது மாற வேண்டும். அனைவரும் திரையரங்குகளில் வந்து படம் பாருங்கள். படக் குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்".

நடிகை நிரோஷா, "இந்தப் படத்தில் வாய்ப்பு கொடுத்த இயக்குநருக்கும் தயாரிப்பாளருக்கும் நன்றி. நடிப்பு என்று தெரியாமல் இயல்பானதாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தார். உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை".

இயக்குநர் சஜீவ் பழூர், " 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்', 'சூது கவ்வும்', 'பண்ணை யாரும் பத்மினியும்' போன்ற படங்கள் சின்ன கருவில் இருந்து கதையானது. தமிழ் எனக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் அதில் 'என்ன விலை' படத்தை இயக்கியுள்ளேன். படம்



பார்த்துவிட்டு சொல்லுங்கள்".

நடிகர் கருணாஸ், "கடந்த 2001 ஆம் ஆண்டு ராமேஸ்வரத்தில் பாலா அண்ணன் இயக்கத்தில் லொடுக்கு பாண்டியாக திரையுலகில் எனது பயணத்தை ஆரம்பித்தேன். நான் அதிகம் மலையாள படங்களை விரும்பி பார்ப்பேன். அதனால் மலையாள ரைட்டர், இயக்குநர்கள், டெக்னீஷியன்ஸ் உடன் இணைந்து ஒரு படமாவது பணிபுரிய ஆசைப்பட்டேன். அது இப்போது நடந்திருக்கிறது. இந்த படம் சாமானியர்களை பற்றியது. அதனால் தான் இயல்பான நடிகர்களை தேர்வு செய்துள்ளார். எனக்கு இன்று பெரிதாக வியாபாரம் இல்லை. இருந்தாலும் என்னை நம்பி ஏழு கோடி ரூபாய் தயாரிப்பாளர்கள் இந்த படத்தில் முதலீடு செய்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு கதை மீது நம்பிக்கை. இந்திய சினிமாவில் இதுவரை யாரும் எழுப்பாத ஒரு கேள்வியை இந்த படத்தில் இயக்குநர் சஜீவ் எழுப்பி இருக்கிறார். எனது இருபது ஆண்டு கால ஆசையை இந்த படம் நிறைவேற்றி இருக்கிறது.

அட்வகேட் கதாபாத்திரத்தில் நிமிஷா அற்புதமாக நடித்திருக்கிறார். எல்லா கதாபாத்திரங்களுக்கும் பொருத்தமானவர்களை இயக்குநர் திறமையாக தேர்வு செய்து இருக்கிறார். இந்த திரைப் படம் வெளியாவதற்கு முன்பே நெட்ஃபிலிக்ஸ் போன்ற முன்னணி ஓடிடி தளம் விலைக்கு வாங்கி இருப்பது மகிழ்ச்சி. 'நந்தா' படத்திற்கு பிறகு என் மனதிற்கு மிகவும் நெருக்கமான திரைப் படம் இது. இத்தனை ஆண்டுகால திரைப் பயணத்தில் என்னுடைய நடிப்பை பார்த்து என் மனைவி முதன் முதலாக இந்த படத்தில் தான் பாராட்டி இருக்கிறார். நிமிஷா மேடமும் என்னுடைய நடிப்பை பார்த்து சிலிர்த்து கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தம் கொடுத்தார். நிச்சயம் இந்த படமும் என்னுடைய கதாபாத்திரமும் உங்கள் அனைவருக்கும் பிடிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்" என்றார்.

# முதல்வர் அலுவலகத்தை 10வது தளத்திற்கு மாற்ற ரூ.6.17 கோடி செலவிடுவதா? நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை 08, செப்டம்பர் 2026: சொகுசுக்காக மக்கள் வரிப்பணத்தை வீணடிப்பதா? என்று முதல்வர் ஜோசப் விஜய்க்கு நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

மாற்றம் தருவேன், புதிய அரசியல் செய்வேன்" என்று கூறி ஆட்சிக்கு வந்த முதல்வர் விஜயின் சாயம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆடிஐ) கீழ் வெளியாகியுள்ள தகவலின் மூலம் குறுகிய காலத்திலேயே வெளுத்துப் போய் விட்டது. தமிழக மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காகவும், அடிப்படைத் தேவைகளுக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், முதல்வர் ஜோசப் விஜய் தனது சொகுசுக்காகவும், தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவும் மக்கள் வரிப்பணமான ரூ. 6.17 கோடியை தனது அலுவலகத்தை 10 - வது தளத்திற்கு மாற்றுவதற்காக வாரி இறைப்பது கடும் கண்டனத்திற்குரியது.

ஒருபுறம் ரூ. 1,200 கோடியில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் என்று அறிவித்துவிட்டு, மறுபுறம் தற்காலிகமாக அலுவலகத்தை மாற்ற இத்தனை கோடி ரூபாயை விரயம் செய்வது ஏன்? தலைமைச் செயலக கோட்டையில் ஏற்கனவே போதிய வசதிகள் இருக்கும் போது, சொகுசுக்காகவும், தனது தனிப்பட்ட காரணங்களுக்காகவும் முதல்வர் அலுவலகத்தை மாற்ற ரூ. 6 கோடிக்கு மேல் செலவிடுவது எந்த விதத்தில் நியாயம்?

விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல் மணிகளைப் பாதுகாக்கச் சரியான சேமிப்புக் கிடங்குகள் இன்றி, அவை மழையில் நனைந்து வீணாகி வருவதாகக் குமுறி வரும் நிலையில், இவ்வளவு பெரிய தொகையைத் தற்காலிக அலுவலகத்திற்காக செலவிட முதல்வருக்கு மனசாட்சி உறுத்தவில்லையா?

"மாற்றம்" என்பது மக்களின் வாழ்வில் மலர வேண்டுமே தவிர, முதல்வரின் அலுவலகச் சுவர்களில் அல்ல. எனவே, இது போன்ற ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, அந்த நிதியைத் தமிழக மக்களின் நலன் காக்கும் ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்கு செலவிட வேண்டும் என முதல்வர் திரு. ஜோசப் விஜய் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# இந்தியாவில் கேலக்ஸி டேப் எஸ்10+ டேப்லெட்டிற்கு சிறப்பு பண்டிகை கால சலுகைகளை அறிவித்த சாம்சங்

கோயம்புத்தூர் 08, செப்டம்பர் 2026: இந்தியாவில் பண்டிகை காலத்தை முன்னிட்டு, தனது முன்னணி கேலக்ஸி டேப் எஸ்10+ டேப்லெட்டிற்கு சாம்சங் சிறப்பு சலுகைகளை அறிவித்துள்ளது. சக்திவாய்ந்த ஹார்ட்வேர், ஏஐ சார்ந்த வசதிகள் மற்றும் பல்துறை பயன்பாட்டை ஒருங்கிணைக்கும் கேலக்ஸி டேப் எஸ்10+, தொழில்முறை பணிகள், படைப்பாற்றல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு பயன்பாடுகளுக்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

கேலக்ஸி டேப் எஸ்10+ 31.47 செ.மீ. டைனமிக் எமோல்ட் 2எக்ஸ் டிஸ்ப்ளே மற்றும் ஆன்டி-ரிஃப்ளெக்டிவ் தொழில்நுட்பத்துடன் வருகிறது. இதன் Quad ஸ்பீக்கர் அமைப்பு ஏஐ-பவர்ட் டயலாக் பூஸ்ட் வசதியுடன் மேம்பட்ட ஆடியோ அனுபவத்தை வழங்குகிறது. ஐபி68 தரநிலை மற்றும் Armor Aluminium கட்டமைப்பு அன்றாட பயன்பாட்டில் கூடுதல் நீடித்த தன்மையை வழங்குகின்றன.

இதனுடன் வழங்கப்படும் எஸ் பென் மூலம் குறிப்புகள் எடுப்பது, ஆவணங்களில் குறிப்புகள் சேர்ப்பது மற்றும் வரைபடங்களை உருவாக்குவது எளிதாகிறது. நோட் அஸிஸ்ட் போன்ற ஏஐ வசதிகள் உரையாடல்களை பதிவு செய்து சுருக்கமாக குறிப்புகளாக மாற்ற உதவுகின்றன. PDF Overlay Translation மற்றும் Handwriting Help போன்ற வசதிகள் ஆவணங்கள் மற்றும் கையெழுத்து குறிப்புகளை கையாள்வதை மேலும் எளிதாக்குகின்றன. கூகுள் சர்க்கிள் டு சர்ச் மூலம் திரையில் உள்ள தகவல்களை நேரடியாக தேடவும் மொழிபெயர்க்கவும் முடியும்.

மீடியாடெக் டைமென்சிட்டி 9300+ பிராசஸர் மூலம் இயங்கும் கேலக்ஸி டேப் எஸ்10+ 12ஜிபி ரேம் மற்றும் 256ஜிபி ஸ்டோரேஜ்-ஐ கொண்டுள்ளது. மைக்ரோ எஸ்டி கார்டு மூலம் சேமிப்பகத்தை மேலும் விரிவாக்கலாம். 10,090 எம்ஏஹெச் பேட்டரி மற்றும் 45டபிள்யு சார்ஜிங் வசதி நீண்ட நேர பயன்பாட்டிற்கு உதவுகிறது. ஸ்மார்ட் திங்க்ஸ் ஒருங்கிணைப்பு மற்றும் 3டி மேப் வியூ மூலம் இணைக்கப்பட்ட ஸ்மார்ட் ஹோம் சாதனங்களையும் ஒரே திரையில் கண்காணித்து நிர்வகிக்க முடியும். இந்த பண்டிகை கால சிறப்பு சலுகைகளுடன், வேலை, படைப்பாற்றல், பொழுது போக்கு மற்றும் ஸ்மார்ட் வசதிகளை ஒரே சாதனத்தில் எதிர்பார்க்கும் பயனர்களுக்கு கேலக்ஸி டேப் எஸ்10+ சிறந்த தேர்வாக அமைகிறது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## ‘பிளாஸ்ட்’ பிளாக்பஸ்டர் வெற்றியை தொடர்ந்து கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ், கல்பாத்தி எஸ். சுரேஷ் தயாரிப்பில் எம் எஸ் ஆனந்தன் இயக்கத்தில் ஜெய், பிரியங்கா மோகன், யோகி பாபு நடிக்கும் ‘ஏஜிஎஸ் 29’

சென்னை 08, செப்டம்பர் 2026: தொடர் வெற்றி படைப்புகளோடு தென்னிந்திய சினிமாவின் முக்கிய தயாரிப்பு நிறுவனமாக உருவெடுத்துள்ள ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் 'பிளாஸ்ட்' பிளாக்பஸ்டர் வெற்றியை தொடர்ந்து தனது 29வது திரைப்படத்தை பூஜையுடன் இன்று தொடங்கியது.

கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ், கல்பாத்தி எஸ். சுரேஷ் தயாரிப்பில் உருவாக உள்ள இந்த படத்தை எம்.எஸ். ஆனந்தன் இயக்குகிறார். விஷால் நடித்த 'சக்ரா' படத்தை இதற்கு முன்னர் இவர் இயக்கியது குறிப்பிடத்தக்கது.

ஜெய், பிரியங்கா மோகன், யோகி பாபு முதன்மை வேடங்களில் நடிக்கும் 'ஏஜிஎஸ் 29' என்று அழைக்கப்படும் இந்த படத்தில் ராஜீவ் மேனன், நாசர், ஜி.எம். சுந்தர், ரமேஷ் திலக் மற்றும் அருள் தாஸ் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர்.



திரைப்படம் குறித்த தகவல்களை பகிர்ந்த இயக்குநர் எம்.எஸ். ஆனந்தன், "தொடக்கம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனியிலேயே அமர வைக்கும் விறுவிறுப்பான அதிரடி ஆக்ஷன் திரைப்படமாக இது அமையும். அதே சமயம், நகைச்சுவை போன்ற இதர சுவாரஸ்யமான அம்சங்களும் சரியான அளவில் இடம்பெறும். ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் இப்படத்தை இயக்குவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது," என்று தெரிவித்தார்.

இப்படத்தின் படப்பிடிப்பு ஊட்டி, சென்னை உள்ளிட்ட இடங்களில் நடைபெறும். இந்த திரைப்படத்தின் கிரியேட்டிவ் புரொடியுசராக அர்ச்சனா கல்பாத்தி, அசோசியேட் கிரியேட்டிவ் புரொடியுசராக ஐஸ்வர்யா கல்பாத்தி, நிர்வாக தயாரிப்பாளராக எஸ்.எம். வெங்கட் மாணிக்கம் பங்காற்றுகின்றனர்.

'கேஜிஎஃப்' மற்றும் சமீபத்திய 'பிளாஸ்ட்' படங்கள் மூலம் பிரபலமான ரவி பஸ்ரூர் இப்படத்திற்கு இசையமைக்கிறார்; பால சுப்பிரமணியம் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றுகிறார். படத்தொகுப்பை பிரதீப் இ. ராகவ் மேற்கொள்ள, கலை இயக்கத்தை எஸ். கண்ணன் கவனிக்கிறார். சண்டைக் காட்சிகளை ஃபீனிக்ஸ் பிரபு இயக்க, தினேஷ் மனோகரன், பல்லவி சிங் மற்றும் செல்வி தங்கராஜ் ஆகியோர் ஆடை வடிவமைப்பாளர்களாகவும், டுனி ஜான் விளம்பர வடிவமைப்பாளராகவும் பணியாற்றுகின்றனர்.

ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ், கல்பாத்தி எஸ். சுரேஷ் தயாரிப்பில் எம்.எஸ். ஆனந்தன் இயக்கத்தில் ஜெய், பிரியா மோகன், யோகி பாபு முக்கிய வேடங்களில் நடிக்கும் 'ஏஜிஎஸ் 29' படத்தின் பூஜை இன்று (செப்டம்பர் 6) நடைபெற்ற நிலையில் படப்பிடிப்பு வரும் 10ம் தேதி தொடங்கி தொடர்ந்து நடைபெற உள்ளது.

## மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் மேற்கு மண்டல கவுன்சிலின் 28-வது கூட்டம் கோவாவில் நடைபெற்றது

சென்னை 08, செப்டம்பர் 2026: மத்திய உள்துறை, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் மேற்கு மண்டல கவுன்சிலின் 28-வது கூட்டம் கோவாவின் பனாஜியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோவா முதலமைச்சர் டாக்டர் பிரமோத் சாவந்த், குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர படேல், மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னாவிஸ், தாத்ரா நாகர் ஹவேலி, டாமன் & டையூ நிர்வாகி திரு பிரஃபுல் கே படேல் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பேசிய திரு அமித் ஷா, மேற்குப் பிராந்தியம் நாட்டின் மிகப்பெரிய பொருளாதார, தொழில்துறை, நிதிசார் மையமாகத் திகழ்வதாகக் குறிப்பிட்டார். 2026-27 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் 7.8 சதவீதப் பொருளாதார வளர்ச்சிக்கு இப்பிராந்தியத்தின் பங்களிப்பு அளப்பரியது என்று பாராட்டினார்.

’ளங்கள், ஏற்றுமதி, புத்தாக்க நிறுவனங்கள், சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான எந்திரமாக மேற்குப் பிராந்தியம் விளங்குவதாக அவர் குறிப்பிட்டார். மகாராஷ்டிரா 33,872 புத்தாக்க நிறுவனங்களுடன் முதலிடத்தில் உள்ளதுடன், குஜராத்தின் முந்த்ரா, தீன்தயாள் துறைமுகங்கள் சரக்குகள் கையாளுவதில் முன்னணியில் உள்ளதாக அவர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் 12 ஆண்டு கால நிர்வாகத்தில், கூட்டுறவு கூட்டாட்சி தத்துவம் முழுமையாக நடைமுறைபடுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், கடந்த 2004 முதல் 2014 வரையிலான காலகட்டத்தில் மண்டல கவுன்சில்களின் கூட்டங்கள் 25 முறை மட்டுமே நடைபெற்ற நிலையில், 2014-க்குப் பிறகு 71 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதுவரை விவாதிக்கப்பட்ட 1,893 பிரச்சினைகளில் 1,445 பிரச்சினைகளுக்கு சுமூகத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் மண்டல கவுன்சில்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் தளமாக மட்டுமின்றி, மக்கள் நலத்திட்டங்களைக் கண்காணிக்கும் அமைப்பாகவும் உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.



மேற்குப் பிராந்திய மாநிலங்களுக்கிடையே தற்போது எவ்வித எல்லைப் பிரச்சனைகளும் இல்லை என்பது ஒரு மகத்தான சாதனை என்று கூறிய அவர், குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் களைதல், புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துதல், போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துதல் ஆகியவற்றில் மேற்கு மண்டலம் தொடர்ந்து தலைமை வகிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நடவடிக்கைகளை முழுமையாகக் கணினிமயமாக்குதல், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளை இணையக் குற்றத் தடுப்புப் பாதுகாப்பு தளங்களுடன் இணைத்தல், கடலோரப் பாதுகாப்பை அடுத்த 2 ஆண்டுகளில் மேலும் பலப்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு அனைத்து மாநிலங்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று திரு அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

## ‘வைல்ட் தமிழ்நாடு’ - இயற்கையின் பேரழகை கண்முன் நிறுத்தும் அற்புதமான திரை அனுபவம்!

சென்னை 08, செப்டம்பர் 2026: மலைகள், காடுகள், கடல், சமவெளி என தமிழ்நாட்டின் இயற்கை வளத்தையும் வன உயிரினங்களையும் பிரம்மாண்டமாகப் பதிவு செய்யும் ஓர் அழகிய ஆவணப்படம்!

நம்மை மகிழ்விக்கும் திரைப்படங்கள் இருக்கின்றன... நமக்கு தகவல்களைத் தரும் திரைப்படங்களும் இருக்கின்றன... ஆனால், நாம் வாழும் நிலத்தையும் இயற்கையையும் புதிய பார்வையில் பார்க்க வைக்கும் படைப்புகள் மிகவும் அரிது. அந்த வகையில் உருவாகியிருக்கும் அற்புதமான படைப்பு ‘வைல்ட் தமிழ்நாடு’.

புகழ்பெற்ற வன உயிரினத் திரைப்பட இயக்குநர் கல்யாண் வர்மா இயக்கத்தில் உருவாகியுள்ள இந்த ஆவணப்படம், தமிழ்நாட்டின் இயற்கை வளத்தையும் அதன் அற்புதமான உயிரின உலகத்தையும் பிரம்மிக்க வைக்கும் காட்சிகளுடன் நம் கண்முன் கொண்டு வருகிறது.

சங்கத் தமிழின் ஐந்திணையும்... நவீன திரை மொழியும்!

இந்தப் படைப்பின் மிகப்பெரிய சிறப்பு, தமிழர்களின் தொன்மையான சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகளுடன் தமிழ்நாட்டின் இயற்கைச் சூழலை இணைத்திருப்பது.

மலைப்பகுதிகள், அடர்ந்த காடுகள், விவசாய நிலங்கள், கடற்கரைப் பகுதிகள் மற்றும் வறண்ட நிலப்பரப்புகள் என தமிழ்நாட்டின் பல்வேறு நிலப்பரப்புகளின் இயற்கை அழகு இந்தப் படத்தில் பிரமிக்க வைக்கும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு சங்கத் தமிழர்கள் இயற்கையை எவ்வளவு நுட்பமாகப் புரிந்துகொண்டார்கள் என்பதையும், அந்த இயற்கை உலகம் இன்றும் எவ்வளவு உயிர்ப்புடன் இருக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

இயற்கையே கதாநாயகன்!

‘வைல்ட் தமிழ்நாடு’ படத்தின் மிகப்பெரிய பலம் அதன் ஒளிப்பதிவு.

யானைகள், சிறுத்தைகள் போன்ற பிரம்மாண்டமான விலங்குகளுடன், பொதுவாக நம் பார்வைக்குக் கிடைக்காத பல அரிய உயிரினங்களின் வாழ்க்கையும் இந்தப் படத்தில் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காட்டுயிர்களின் இயல்பான வாழ்க்கை, அவற்றின் நடத்தை, உணவு தேடும் முறை, ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்பு என இயற்கையின் பல்வேறு பரிமாணங்களை பொறுமையுடனும் நுணுக்கத்துடனும் கேமரா பதிவு செய்கிறது.

கல்யாண் வர்மாவின் சிறப்பான இயக்கம்

வன உயிரினங்கள் குறித்த ஆழமான புரிதலும் நீண்டகால அனுபவமும் கொண்ட இயக்குநர் கல்யாண் வர்மா, இந்தப் படைப்பை மிகவும் நேர்த்தியாக உருவாக்கியிருக்கிறார்.

இயற்கையை அவசரப்படுத்தாமல், அதன் இயல்பான வேகத்திலேயே கதையை நகர்த்துவது இயக்குநரின் சிறப்பு.

பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கடினமான களப்பணியின் விளைவாக கிடைத்த காட்சிகள், தமிழ்நாட்டின் இயற்கை உலகை இது வரை நாம் பார்த்திராத கோணத்தில் வெளிப்படுத்துகின்றன.

அரவிந்த் சுவாமியின் குரல் - கூடுதல் சிறப்பு!




படத்திற்கு அரவிந்த் சுவாமி வழங்கியிருக்கும் பின்னணிக் குரல், இந்தப் படைப்பிற்கு மேலும் ஒரு கம்பீரத்தையும் உணர்வையும் சேர்க்கிறது. அவரது குரல் காட்சிகளை ஆக்கிரமிக்காமல், காட்சிகளுடன் இணைந்து பயணிக்கிறது.

அமைதியான, ஆழமான குரல் இயற்கையின் பிரம்மாண்டத்தையும் அதன் நுட்பமான அழகையும் பார்வையாளர்களுக்கு இன்னும் நெருக்கமாகக் கொண்டு வருகிறது.

ரிக்கி கேஜின் இசை - இயற்கையின் இசையாகவே மாறுகிறது!

மூன்று முறை கிராமி விருது பெற்ற இசையமைப்பாளர் ரிக்கி கேஜ் அமைத்துள்ள இசை, படத்தின் மற்றொரு மிகப்பெரிய பலம்.

வன உயிரினங்களைத் தாண்டி பேசும் படம்!

‘வைல்ட் தமிழ்நாடு’ படத்தின் மிகப்பெரிய வெற்றி, இது வெறும் விலங்குகளைக் காட்டிவிட்டு முடிந்துவிடாதது தான்.

தமிழ்நாடே ஒரு மிகப்பெரிய இயற்கைச் செல்வம் என்பதை இந்தப் படம் நமக்கு நினைவூட்டுகிறது.

காடுகள், மலைகள், ஆறுகள், கடற்கரை, பவளப்பாறைகள் என இயற்கையின் ஒவ்வொரு பகுதியும் எண்ணற்ற உயிர்களுக்கு வாழ்விடமாக இருக்கிறது. நமது இயற்கை மரபையும் எதிர்கால தலைமுறையையும் பாதுகாக்கும் பொறுப்பு என்பதையும் இந்தப் படம் அழுத்தமாக உணர்த்துகிறது.

பெரிய திரையில் பார்க்க வேண்டிய அனுபவம்!

இத்தகைய பிரம்மாண்டமான வனக் காட்சிகளை பெரிய திரையில் பார்க்கும் போது அதன் தாக்கம் பல மடங்கு அதிகரிக்கிறது. குடும்பத்தினர், மாணவர்கள், இயற்கை ஆர்வலர்கள், வன உயிரினங்களை நேசிப்பவர்கள் என அனைவரும் பார்க்க வேண்டிய ஒரு முக்கியமான படைப்பாக ‘வைல்ட் தமிழ்நாடு’ அமைந்துள்ளது.

‘வைல்ட் தமிழ்நாடு’ ஒரு வன உயிரின ஆவணப்படம் மட்டுமல்லஞ் தமிழ்நாட்டின் இயற்கைத் தாய்க்கு செலுத்தப்பட்டிருக்கும் அழகிய திரை வணக்கம்!

அற்புதமான ஒளிப்பதிவு, நேர்த்தியான இயக்கம், அரவிந்த் சுவாமியின் கம்பீரமான குரல், ரிக்கி கேஜின் மனதை வருடும் இசை என அனைத்து அம்சங்களும் இணைந்து இந்தப் படைப்பை மறக்க முடியாத அனுபவமாக மாற்றுகின்றன.

தமிழ்நாட்டின் இயற்கை அழகை நாம் எவ்வளவு பெருமையாகக் கொண்டாட வேண்டும் என்பதை உணர்த்தும் ஒரு அற்புதமான படைப்பு.

தீர்ப்பு: மஸ்ட் வாட்ச் - ஒவ்வொரு தமிழரும் பெருமையுடன் பார்க்க வேண்டிய தமிழ்நாட்டின் இயற்கைத் திருவிழா!